## இரண்டாவது நகரங்கள் கிராமிய சமூக அடிப்படை நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டம் (கடன் இல் 2758 எஸ்ஆர்ஐ) - 2013

இரண்டாவது நகரங்கள் கிராமிய சமூக அடிப்படை நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் (என்டபிள்யூஎஸ்டீபீ) ஆசிய அபிவிருத்தி வங்கிக்குமிடையே (ஏடீபீ) கைச்சாத்திடப்பட்ட 2011 யூலை 22 ஆந் திகதிய செயற்திட்ட உடன்படிக்கையின் (ஏ) ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவு மற்றும் 2758 எஸ்ஆர்ஐ ஆம் இலக்க குறைநிரப்பு கடன் உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு, காலம் என்பன

இரண்டாவது நகரங்கள் கிராமிய சமூக அடிப்படை நீர் வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் கீழுள்ள தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது செயற்திட்டத்தின் பிரதான நிறைவேற்று மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பான யூஎஸ்டொ. 85.6 மில்லியன் அடங்கலாக 1993 எஸ்ஆர்ஐ-(எஸ்எப்) ஆம் இலக்க கடனை 2003 ஆகஸ்ட் 18 இல் ஏடீபீ அங்கீகரித்திருந்தது. வட மத்திய மாகாணத்தின் ஐந்து நகரப் பிரதேசங்கள் மற்றும் கிராமியப் பிரதேசங்களிலுள்ள 969,000 மக்களுக்கு பாதுகாப்பான நீரினையும் 171,500 மக்களுக்கு சுகாதார வசதிகளையும் வழங்குவதும் நீர்த்துறை நிறுவனங்களை பலப்படுத்துவன் மூலம் பாதுகாப்பான நீரை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கத்தினது இயலுமையினை அதிகரிககச் செய்வதுமே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கிரயத்தின் குறிப்பிடத்தக்க தளம்பல்கள் காரணமாக, தலைமை நிர்மாண வேலை, மூல நீர் பரிமாற்றல் மற்றும் மூதூரில் சுத்திகரிப்புப் பொறி நிர்மாணம் போன்ற சிவில் வேலைகளை மேற்கொள்வதற்காக குறைநிரப்புக் கடனை வழங்குவதற்கு ஏடீபீ இணக்கம் தெரிவித்திருந்தது. குறைநிரப்புக் கடன் உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் யூஎஸ்டொ. 14.9 மில்லியனானதுடன் அதில் யூஎஸ்டொ. 13.3 மில்லியன் அல்லது 89.26 சதவீதத்தினை நிதியளிப்பதற்கு ஏடீபீ இணங்கியிருந்ததுடன் யூஎஸ்டொ. 1.6 மில்லியன் அல்லது 10.74 சதவீதத்தினை நிதியளிப்பதற்கு இலங்கை அரசாங்கம் இணங்கியிருந்தது. செயற்திட்ட நடவடிக்கைகள் 2014 யூன் 30 அளவில் பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கேல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள்,

பொறுப்புக்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் குறித்துரைக்கப்பட்ட கடன் உடன்படிக்கையின் அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கட்டுநிதி நிதியக் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளில் நியாயமாக வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியானது அத்திகதியிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொளள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான மீள் நிரப்பல்கள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளில் நியாயமாக வெளிப்படுத்தப்பட்டன என்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியானது அத்திகதியிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கக் கூடியதாவிருந்த தகவல்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயற்திட்டச் செலவினம் ரூபா 708,338,287 ஆக காணப்பட்டதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய செலவினம் ரூபா 1,166,877,660 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினங்கள், முன்னைய ஆண்டிற்கான செலவினங்கள் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரட்டிய செலவினம் என்பன கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| விடயம் | திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரட்டிய செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 618,923,189 | 334,789,848 | 972,038,166 |
| உசாத்துணைச் சேவைகள் | 18,043,803 | 58,670,926 | 115,998,453 |
| அதிகரிக்கும் செயற்பாட்டுக் கிரயம் | 64,402,312 | 4,263,954 | 68,666,265 |
| வட்டிக் கட்டணங்கள் | 6,968,983 | 3,205,793 | 10,174,776 |
| மொத்தம் | 708,338,287 | 400,930,521 | 1,166,877,660 |

### 4.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கின் தொழிற்பாடுகள் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடி அக் கணக்கில் காணப்பட்ட மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

| | யூ.எல்.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 1,059,018 | 134,665,570 |
| கூட்டுக: மீள்நிரப்பல்கள் | - | - |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 3,010,696 |
| | 1,059,018 | 137,676,266 |
| கழி:- பற்றுதல்கள் | 477,567 | 61,649,767 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 581,451 | 76,026,499 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 686,863 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்களும் பொருத்துக்களும் நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்படுவதற்குப் பதிலாக அதிகரிக்கும் செயற்பாட்டுக் கிரயத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 1993, 2275 மற்றும் 2276 ஆம் இலக்க கடன்களின் கீழ் அமுலாக்கப்பட்ட ஏனைய செயற்திட்டங்கள் தொடர்பில் செயற்திட்டத்தினால் செலவிடப்பட்ட ரூபா 2.7 மில்லியன் தொகை கூட தவறுதலாக இச்செயற்திட்டத்தின் அதிகரிக்கும் செயற்பாட்டுக் கிரயத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 1993 ஆம் இலக்க கடனின் கீழ் அமுலாக்கப்பட்ட செயற்திட்டத்தில் கடமையாற்றிய ஊழியர்களுடன் சம்பந்தப்பட்ட ரூபா 5.5 மில்லியன் தொகையான பணிக்கொடை ஏற்பாடு செயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) செயற்திட்டத்தின் இலங்கை அரசாங்க பங்களிப்புகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1.1 மில்லியன் தொகையான ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களும் ஏனைய நுகர்வுப் பொருட்களும் தேசிய

நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய அலுவலகங்களால் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(உ) கடனிலிருந்து மீளப்பெறுவதற்கு தகைமையுடைய நான்கு ஒப்பந்தகாரர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 11,435,028 தொகை முறையற்ற விதத்தில் திறைசேரியிடமிருந்து பெறவேண்டிய பங்களிப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 6. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### நிதிகளின் பயன்பாடு

பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியளித்தல் மற்றும் பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டிற்கான நிதிகளின் பயன்படுத்தல் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரட்டிய பயன்படுத்தல் என்பவற்றுடன் தொடர்புடைய சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | வழங்குவதற்கு உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | மீளாய்வாண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | யூஎஸ்டொ (மில்.) | ரூபா (மில்.) | ரூபா (மில்.) | ரூபா (மில்.) | யூஎஸ்டொ (மில்.) | ரூபா (மில்.) |
| ஏடீபீ | 13.30 | 1,206.30 | 417.00 | 414.72 | 6.8 | 870.03 |
| இலங்கை அரசாங்கம் | 4.57 | 511.00 | 277.03 | 197.88 | 2.1 | 276.37 |
| மொத்தம் | 17.87 | 1,717.30 | 694.03 | 612.60* | 8.9 | 1,146.4* |

* அட்டுறுச் செலவினங்களின் தாக்கங்கள் காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகைகளிலிருந்து மேற் குறிப்பிடப்பட்ட தொகைகள் வேறுபடுகின்றன.

## 6.2 பௌதீகச் செயலாற்றல்

(அ) பட்டியலிடப்பட்ட காலத்திற்குள் ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலவளங்களைப் பயன்படுத்தி செயற்திட்டத்தின் குறிக்கோள்களை அடைந்துகொள்வதனை உறுதிப்படுத்துவதற்கு முழுச் செயற்திட்ட காலத்தையும் உள்ளடக்கி மாதாந்த, காலாண்டு மற்றும் அரையாண்டு அடிப்படையில் இலக்குகளுக்கான பொறுப்புக்களை நிறுவுவதுடன் நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகளைச் கட்டிக்காட்டும் விபரமான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் அவ்வாறான திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்திட்டத்தால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்நாட்டு நிதிகளிலிருந்தான ரூபா 1,213,378,199 மற்றும் வெளிநாட்டு நிதிகளிலிருந்தான யூஎஸ்டொ. 4,214,369 மதிப்பீட்டுக் கிரயத்தில் தலைமை வேலை, மூல நீர் பரிமாற்றல் மற்றும் மூதூரில் சுத்திகரிப்புப் பொறி (பீஏ2) என்பவற்றை நிர்மாணிப்பதற்காக கையளிக்கப்பட்ட ஒப்பந்த வேலைகளை 2013 திசெம்பர் 20 அளவில் பூரணப்படுத்துவதற்குப் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்த வேலைகளின் பௌதீகச் செயன்முன்னேற்றம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 75 சதவீதம் மாத்திரமேயாகும். ஆகையால் ஒப்பந்த காலப்பகுதி 2014 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

(இ) பிரதான விநியோகக் குளாய் வழிக்காக (10.5 கி.மீ) பரிகார நீர் குளாய்களை வழங்கிப் பொருத்துதல் மற்றும் இரண்டு முன்னேற்றகர நீர் சுத்திகரிப்புப் பொறிகளை நிர்மாணித்தல் ஆகியவற்றின் ஒப்பந்தங்கள் 2 ஆண்டுகள் தாமதத்தின் பின்னர் ரூபா 1,162,504,731 கிரயத்தில் 2011 செப்தெம்பர் 30 ஆந் திகதி செயற்திட்டத்தால் பூரணப்படுத்தப்பட்டிருந்ததுடன் ஏனைய ஒப்பந்தங்களின் கீழ் குறித்த ஒப்பந்தத்துடன் இணைந்ததாக பூரணப்படுத்தப்பட வேண்டிய மூல நீர் பரிமாற்றல் சுத்திகரிப்புப் பொறி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீர் பாய்ச்சல் குளாய் போன்ற தொடர்புடைய வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கஸஷாமை காரணமாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியிலுள்ளவாறும் அவை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.